ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2202/3 - 2020 නොවැම්බර් මස 16 වැනි සඳුදා - 2020.11.16

*2202/3 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், முதலீடு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராக இருப்பதினால் 2011, ஓகத்து 12 ஆந் திகதிய 1718/31 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக, இக்கட்டளையின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சட்டவாக்கத்திலிருந்தான விலக்களிப்பு அதனகத்து குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்கு உட்படுத்தப்பட்டு கொழும்பு இன்டர்நெஷனல் கென்டெய்னர் டேர்மினல்ஸ் லிமிட்டட் நிறுவனத்திற்குப் பொருத்துவதுடன் இவ் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்கு நடைமுறையில் இருத்தலும் வேண்டும் என இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

**அட்டவணை**

**சுங்கக் கட்டளைச் சட்டம் (235 ஆம் அத்தியாயம்)**

*1.* எதிர்மறைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் நீங்கலாக விரிவாக்கத்திற்குத் தேவையான அனைத்து உபகரணங்கள்/ துணைப்பாகங்கள்/ஆக்கக்கூறுகள், இவ் வர்த்தமானி அறிவித்தல் திகதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுகளைக் கொண்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின் போது சுங்கத் தீர்வை விலக்களிப்பிற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

*2.* சுங்கத் தீர்வையிலிருந்தான விலக்களிப்பானது, விரிவாக்கத்தின் அதிகரிப்புக்கும் நவீனமயப்படுத்தலுக்கும் தேவைப்படும் வங்கி உத்தரவாத அடிப்படையின் கீழ் இவ் வர்த்தமானி அறிவித்தல் திகதிக்கு முன்னர் ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு ஏற்புடையதாகும்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, நவெம்பர் 16.*
*12-272*


1A - PG 5171 — 570 (2020/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.